RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023- 2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 122 | மே.8, 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# மாநகரப் பேருந்தில் முதல்வர் ஸ்டாலின் பயணம்: மகளிர் விடியல் திட்ட பயனாளிகளிடம் உரையாடல்

சென்னை: மே.8-

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மாநகரப் பேருந்தில் பயணம் செய்து, "மகளிர் விடியல் பயணத் திட்டம்." குறித்து பயணிகளிடம் உரையாடினார். அப்போது முதல்வர், பேருந்து ஓட்டுநர் மற்றும் நடத்துநரிடம், முறையாக பேருந்து நிறுத்தத்தில் பேருந்துகளை நிறுத்தி பெண் பயணிகளை ஏற்றிச் செல்லவும், பேருந்தின் முழு கொள்ளளவு பயணிகளோடு பயணத்தை தொடர வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு நேற்று (மே 7) பொறுப்பேற்று நான்காண்டுகள் நிறைவு பெற்று, ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

நேற்று தலைமைச் செயலகம் வருகைதந்த தமிழக முதல்வர், தலைமைச் செயலகத்திலிருந்து சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற உள்ள விழாவுக்கு செல்லும் வழியில்,



சென்னை வள்ளலார் நகரிலிருந்து விவேகானந்தர் இல்லம் வரை செல்லும் 32-B மாநகரப் பேருந்தில் அரசினர் தோட்டம் அருகில் உள்ள ஓமந்தூரார் பேருந்து நிறுத்தத்திலிருந்து பயணம் செய்து முதல்வர் பொறுப்பேற்ற முதல் நாள் அறிவித்த 5 திட்டங்களில் ஒன்றான "மகளிர் விடியல் பயணம் திட்டத்தின்" கீழ் பேருந்துகளில் பயணம் செய்த பயணிகளிடம் உரையாடினார்.

அப்போது, பேருந்தில் பயணம் மேற்கொண்ட பெண் பயணிகள் இந்த மகத்தான திட்டமான "மகளிர் விடியல் பயணம் திட்டம்" மூலம் நாங்கள் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொண்டு வருவதால், நேரத்துக்கு வேலைக்கு செல்ல முடிகிறது. இதனால், மாதம் 2000 ரூபாய் வரையில் சேமித்து வைக்க முடிகிறது. அந்த சேமிப்புத் தொகையிலிருந்து தங்கள் பிள்ளைகளுக்கான படிப்பு செலவுகளுக்கும், மருத்துவ செலவுகள் மற்றும் இதர செலவுகளுக்கும் பயன்படுத்துகிறோம். இத்திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருவதற்கும் நான்காண்டு முடிவடைந்து ஐந்தாண்டும் ஆண்டு தொடங்குவதையொட்டி முதல்வருக்கு வாழ்த்து தெரிவித்து மீண்டும் இந்த நல்லாட்சி தொடர வேண்டும் என்றும், தங்களது விரும்பத்தை தெரிவித்துக்கொண்டனர்.

தமிழக முதல்வர், விடியல் பயணம் திட்டத்தில் மூலம் பயன் பெறும் பெண்களுக்காக முறையாக பேருந்து நிறுத்தத்தில் பேருந்துகளை நிறுத்தி அவர்களை ஏற்றிச் செல்ல வேண்டும் என்றும், பேருந்தின் முழு கொள்ளளவு பயணிகளோடு பேருந்து பயணத்தை தொடர வேண்டும் என்றும் நடத்துனர் மற்றும் ஓட்டுனர்களிடம் அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சிவசங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆபரேஷன் சிந்தூர்: தமிழகம் துணை நிற்பதாக ஸ்டாலின் கருத்து

### ராணுவத்துக்கு இபிஎஸ் பாராட்டு

சென்னை: மே.8-

பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் பயங்கரவாத அமைப்புகளின் 9 முகாம்கள் மீது 'ஆபரேஷன் சிந்தூர்' மூலம் இந்திய ராணுவம் வான்வழித் தாக்குதலை நடத்திய நிலையில், 'இந்திய ராணுவத்துடன் தமிழகம் துணை நிற்கும்' என முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் இன்று வெளியிட்ட சமூக வலைதள பதவில், "பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் இந்திய ராணுவத்துடன் தமிழகம் துணை நிற்கிறது. நமது ராணுவத்தினருடன், நமது நாட்டுக்காக, தமிழகம் உறுதியாக நிற்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இபிஎஸ் பாராட்டு: இதனிடையே, தமிழக எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி, "பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பயங்கரவாத அமைப்புகளின் முகாம்களை குறிவைத்து ஆபரேஷன் சிந்தூர் என்ற திட்டத்தை துல்லியமாக செயல்படுத்தியதற்காக இந்திய பாதுகாப்பு படையை நான் பாராட்டுகிறேன்.



பிரதமர் மோடி தலைமையிலான அரசு மூலம் நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. இந்த தீர்க்கமான நடவடிக்கை, பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கும், நமது மக்களைப் பாதுகாப்பதற்கும் நமது ராணுவத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை சுட்டிக் காட்டுகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர்: கடந்த ஏப்ரல் 22ம் தேதி காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். இதன்காரணமாக, இந்தியா பாகிஸ்தான் இடையே போர் மேகம் சூழ்ந்துள்ளது. அந்தத் தாக்குதலுக்கு பதிலடி தரும் விதமாக, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் வான்வழி தாக்குதலை மேற்கொண்டது இந்திய ராணுவம். பாகிஸ்தானில் உள்ள 9 பயங்கரவாத முகாம்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## ஓசூர் சந்திரசூடேஸ்வரர் மலைக் கோயிலில் விற்பனை பிரசாதத்தில் பாம்பு: பக்தர்கள் அதிர்ச்சி

ஓசூர்: மே.8-

ஓசூர் சந்திரசூடேஸ்வரர் கோயிலில் விற்பனை பிரசாதத்தில் உயிரிழந்த குட்டி பாம்பு இருந்ததைக் கண்டு பக்தர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதுதொடர்பாக அறநிலையத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஓசூர் தேர்ப்பேட்டை பகுதியில் உள்ள மலை மீது மரகதாம்பிகை சமேத சந்திரசூடேஸ்வரர் கோயில் உள்ளது. இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இக்கோயில் வளாகத்தில் பிரசாதம் விற்பனை கடை உள்ளது. இங்கு புளியோதரை, தயிர்சாதம் உள்ளிட்ட பிரசாதம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



இந்நிலையில், கர்நாடக மாநிலம் பெங்களூவைச் சேர்ந்த மதனிகா என்ற பக்தர் நேற்று பிரசாத கடையில் வாங்கிய புளியோதரை பிரசாதத்தில் உயிரிழந்த நிலையில் குட்டி பாம்பு இருந்தது. இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த அவர் இதுதொடர்பாக கோயில் செயல் அலுவலர் அலுவலகத்தில் புகார் அளித்தார். இத்தகவல் அறிந்த கோயிலுக்கு வந்த பக்தர்கள் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தனர்.

இதுதொடர்பாக இந்து சமய அறநிலையத்துறை செயல் அலுவலர் சாமிதுரை கூறும்போது,"கோயிலில் பிரசாதம் விற்பனை செய்ய திருச்சியைச் சேர்ந்த வாசுதேவன் என்பவர் ஒப்பந்தம் பெற்றுள்ளார்.

இங்கு (நேற்று) விற்பனை செய்யப்பட்ட புளியோதரையில் குட்டி பாம்பு உயிரிழந்த நிலையில் இருந்ததாக எழுந்த புகாரைத் தொடர்ந்து, விற்பனைக்கு வைக்கப்பட்ட பிரசாதங்கள் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டு, அழிக்கப்பட்டது. மேலும், இதுதொடர்பாக விசாரணை நடத்தி வருகிறோம்" என்றார்.

## கோடநாடு வழக்கில் ஜெயலலிதாவின் உதவியாளரிடம் விசாரணை

கோவை: மே.8-

நீலகிரி மாவட்டம் கோடநாடு எஸ்டேட்டில் 2017ல் நடந்த கொலை, கொள்ளை வழக்கை சிபிசிஐடி போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

இவ்வழக்கு விசாரணைக்கு ஆஜராகுமாறு முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிடம் உதவியாளராக இருந்த பூங்குன்றனுக்கு, கோவை சிபிசிஐடி போலீஸார் சம்மன் அனுப்பினர். அதன்படி, காந்திபுரத்தில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் பூங்குன்றன் நேற்று ஆஜரானார். அவரிடம் எஸ்.பி. மற்றும் கூடுதல் எஸ்.பி. தலைமையிலான போலீஸார் காலை 10.30 மணி முதல் மாலை 5 மணி வரை விசாரித்தனர்.

இதுகுறித்து போலீஸார் கூறும்போது, ''கோடநாடு எஸ்டேட் பங்களாவில் இருந்த பொருட்கள், ஆவணங்கள் குறித்தும், பங்களா வளாகத்தில் எந்தெந்த பகுதிகளில் சிசிடிவி கேமராக்கள் இருந்தன என்பது குறித்தும் பூங்குன்றனிடம் விசாரிக்கப்பட்டது'' என்றனர்.

## சாதிவாரி கணக்கெடுப்பு பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும்: பிரதமர் மோடிக்கு ராமதாஸ் கடிதம்

சென்னை: மே.8-

சாதிவாரி கணக்கெடுப்பு முடிவு மிகவும் சிறப்பானது என்றும் அதன் பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும் எனவும் பிரதமர் மோடிக்கு பாமக நிறுவனர் ராமதாஸ் கடிதம் எழுதியுள்ளார்.




இது தொடர்பாக ராமதாஸ், பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில், "இந்தியப் பிரதமராகிய தங்களுக்கு இதுவரை இல்லாத வகையில், மிகவும் மகிழ்ச்சியான மனநிலையில் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். இந்திய மக்களுக்கு முழுமையான சமூகநீதியை வழங்கும் வகையில், நாடு முழுவதும் அடுத்த மக்கள்தொகை கணக்கெடுப்பை சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பாக நடத்த தங்கள் தலைமையிலான அரசு ஆணையிட்டிருப்பது தான் இதற்கு காரணம். இதற்காக தங்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உழைக்கும் மக்களின் பிரதிநிதியாக திகழும் பாட்டாளி மக்கள் கட்சி உருவாக்கப் பட்டதன் நோக்கங்களில் முதன்மையானது சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆகும். பாட்டாளி மக்கள் கட்சி தொடங்கப்படுவதற்கு முன்பு 1980ஆம் ஆண்டு வன்னியர் சங்கத்தை நான் தொடங்கிய போது, தொடக்கவிழாவில் நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானமே சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பது தான்.

அப்போது முதல் கடந்த 45 ஆண்டுகளாக சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஆயிரக்கணக்கான மக்கள் இயக்கங்களை பாட்டாளி மக்கள் கட்சி நடத்தியிருக்கிறது. சாதிவாரி கணக்கெடுப்பு என்றால் பாமக தான் நினைவுக்கு வரும் என்று கூறும் அளவுக்கு அதற்காக பாமக போராடி யிருக்கிறது.

இந்தியாவின் பிரதமர்களாக இருந்த ராஜீவ்காந்தி, வி.பி.சிங், வாஜ் பாய், மன்மோகன் சிங் ஆகியோரை சந்தித்து சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறேன். வாஜ் பாய் ஆட்சிக் காலத்தில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுவதற்கான ஆணை பிறப்பிக்கப்படும் நிலை வரை வந்து, கடைசி கட்டத்தில் கைநழுவிப் போனது.

மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்ற வாக்குறுதியை பாட்டாளி மக்கள் கட்சி பெற்றது. ஆனால், கடைசி நேரத்தில் சாதிவாரி கணக்கெடுப்புக்கு மாற்றாக சமூக, பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன் விவரங்கள் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் வெளியிடப்படாததால் அதன் நோக்கம் வீணாணது.

2014 ஆம் ஆண்டில் தாங்கள் பிரதமரான பிறகு தங்களிடமும் பலமுறை இதே கோரிக்கையை முன்வைத்திருக்கிறேன். அதன்பயனாக, 2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் நாள், மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து விவாதிப்பதற்காக மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற கூட்டத்துக்கு பிறகு மத்திய அரசின் சார்பில் வெளி யிடப்பட்ட அறிக்கையில், ''இந்திய வரலாற்றில் முதன்முறையாக 2021 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் போது ஓபிசி சாதி விவரங்களும் சேகரிக்கப்படும்'' என்று கூறப்பட்டிருந்தது. அதை பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்றது.

கரோனா காரணமாக 2021ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படாத நிலையில், அந்தக் கணக்கெடுப்பு எந்த ஆண்டில் நடத்தப்பட்டாலும் அது சாதிவாரி கணக்கெடுப்பாகத் தான் நடத்தப்பட வேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொண்டேன். 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் நாள் உங்களை நான் தில்லியில் நேரில் சந்தித்த போது, சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தேன். அதைத் தொடர்ந்து 04.02.2020, 28.08.2021, 24.09.2024 ஆகிய நாள்களில் 2021 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பை சாதிவாரி கணக்கெடுப்பாக நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி தங்களுக்கு கடிதம் எழுதினேன்.

சாதிவாரி கணக்கெடுப்புக்காக நானும், பாட்டாளி மக்கள் கட்சியும் இடைவிடாமல் வலியுறுத்தி வந்த நிலையில், இப்போது சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என மத்திய அரசு அறி வித்திருப்பதை, எங்களின் முயற்சிக்கு கிடைத்த வெற்றியாக கருதுகிறேன். இந்தியாவில் சமூகநீதியை பாதுகாப்பதில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆங்கிலேயர் ஆட்சியில் 1931 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிறகு, கடந்த 95 ஆண்டுகளாக இந்தியாவில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை. இதனால், பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்குவது உள்ளிட்ட விஷயங்களில் முழுமையான புள்ளிவிவரங்கள் கிடைக்காமல் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன. காலப் போக்கில் இட ஒதுக்கீடு என்ற உன்னதமான தத்துவமே அழிக்கப்பட்டு விடும் பேராபத்து ஏற்பட்டிருந்தது.

கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களை முன்னேற்றும் நோக்கத்துடன், 1990 ஆம் ஆண்டில் தொடங்கி இப்போது வரை பல்வேறு வகையான இட ஒதுக்கீட்டை மத்திய, மாநில அரசுகள் வழங்கி வருகின்றன. இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றங்களிலும் வழக்குகள் தொடரப்படும் போது, அவற்றை விசாரிக்கும் நீதிபதிகள் யதார்த்தத்தையோ, பயனடையும் சமுதாயங்களின் பின்தங்கிய நிலையையோ பார்ப்பதில்லை.

மாறாக, இட ஒதுக்கீடு பெறும் சமுதாயத்தின் மக்கள்தொகை இட ஒதுக்கீட்டின் அளவுடன் குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் உள்ளதா? என்பதை மட்டுமே பார்ப்பார்கள். அதை நிரூபிப்பதற்கு தேவையான புள்ளிவிவரங்களை தாக்கல் செய்ய முடியாவிட்டால் இட ஒதுக்கீடு செல்லாது என்று நீதிமன்றங்கள் தீர்ப்பளித்து வந்தன.

சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுவதன் மூலம், இந்தியாவில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மக்கள்தொகை எவ்வளவு? என்பது தெரியவரும். இந்த விவரம் துல்லியமாகத் தெரிந்தால் இந்தியாவில் இட ஒதுக்கீட்டுப் பிரி வினரின் எண்ணிக்கையும் தெளிவாகும். இத்தகைய புள்ளி விவரங்கள் தெளிவாகத் தெரியாததால் தான், சமூக அடிப்படையிலான இட ஒதுக்கீட்டுக்கு 50% என்ற உச்சவரம்பை கடந்த 63 ஆண்டுகளாக உச்ச நீதிமன்றம் திணித்து வந்திருக்கிறது.

சாதிவாரி கணக்கெடுப்புக்குப் பிறகு இந்த உச்சவரம்பு நீக்கப்படக்கூடும். அவ்வாறு நீக்கப்படும் நாள் இந்தியாவின் சமூகநீதி வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படும் நாளாக அமையும். அப்படி ஒரு வாய்ப்புக்கு, சுதந்திர இந்தியாவில் முதல்முறையாக அடித்தளம் அமைத்திருப்பதற்காக பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் சமூகநீதி வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படும் அந்த நாள் விரைவில் வர வேண்டும் என்று ஒட்டுமொத்த நாட்டு மக்களும் விரும்புகின்றனர். அந்த விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் இந்தியாவில் சாதிவாரு மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகள் எப்போது தொடங்கும்? எப்போது நிறைவடையும் என்பதற்காக கால அட்டவணையை வெளியிட வேண்டும் என வேண்டுகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.






# சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசிக்கும் வகையில் ஊட்டி மலர் கண்காட்சி 10 நாட்களுக்கு நீடிப்பு

ஊட்டி, மே.08-

"ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 5 நாட்கள் நடைபெறும் 127 வது மலர்கண்காட்சியை சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசிக்கும் வகையில் 10 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது," என மாவட்ட மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தெரிவித்தார்.

ஊட்டி அரசு கலைக்கல்லூரி மைதானத்தில், பள்ளி வாகனங்களுக்கான ஆய்வு ஆண்டுதோறும் செய்யப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்ட வட்டார போக்குவரத்துத்துறை சார்பில், இந்த ஆண்டுக்கான ஆய்வு நடைபெற்றது. இதையொட்டி தனியார் பள்ளி வாகனங்கள் அங்கு கொண்டு வரப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டன. 171 பள்ளி வாகனங்கள் இந்த ஆய்வில் இடம்பெற்றிருந்தன.

இந்த வாகனங்களில் மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா, போக்குவரத்து அலுவலர் (பொ) ரவி ஆகியோர் ஆய்வு செய்தனர். அப்போது முதலுதவி பெட்டியில் மருந்துகள் சரியாக உள்ளதா, காலாவதியான மருந்துகள் இருக்கிறதா, அவசரகால வழி திறந்து மூடும் வசதி சரியாக உள்ளதா என ஆய்வு செய்யப்பட்டது.

ஆய்வுக்குப் பின் செய்தியாளர்களிடம் மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா கூறியதாவது: "நீலகிரி மாவட்டத்தில் இபாஸ் நடைமுறை அமலில் உள்ளது. ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில், 5 நாட்கள் நடைபெறும் 127வது மலர்கண்காட்சியை சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசிக்கும் வகையிலும், கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் வகையில் 10 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

12 மீட்டர் நீளத்துக்கு அதிகமான சாஸிஸ் உள்ள சுற்றுலா வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் நீலகிரி மாவட்டத்துக்கு வர தடை விதிக்கப்பட்டுள்ளது. மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். சாலையோரங்களில் சமையல் செய்யக் கூடாது. ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை உள்ளதால், யாரும் பிளாஸ்டிக் கொண்டு வரக்கூடாது.

பிளாஸ்டிக் கொண்டு வருபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும். இது குறித்து சோதனைச் சாவடிகளில் விழிப்புணர்வு பதாகைகள் வைக்கப்படும். நீலகிரி மாவட்டத்தில் புலி, சிறுத்தை போன்ற வனவிலங்குகள் இருப்பதால் இரவு நேரங்களில் வாகனங்களில் யாரும் படுத்து உறங்க கூடாது." என்று அவர் கூறினார்.

# இந்து திருக்கோயில்கள் பாதுகாப்பு சங்கம் சார்பில் மக்களுக்கான மக்கள் இயக்கம் இணைந்து நடைபெற்ற முழு நாள் ஆன்மீக நிகழ்ச்சி

குரோம்பேட்டை, மே.08-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் அனைத்திந்திய இந்து திருக்கோயில்கள் பாதுகாப்பு சங்கம் சார்பில் மக்களுக்கான மக்கள் இயக்கம் சமூக ஆர்வலர்கள் அமைப்புகளின் கூட்டமைப்பு 24.04.2025 வியாழக்கிழமை அன்று குரோம்பேட்டை வசந்த மண்டபத்தில் யந்திராலயம், மக்களுக்கான மக்கள் இயக்கம், ஸ்தாபகர் தலைவர் யந்திராலய நாணல் குருஜி சக்தி ஸ்ரீ வீரமணி சுவாமிகள் தலைமையில், மக்களுக்கான மக்கள் இயக்கம் பொதுச் செயலாளரும், அனைத்திந்திய இந்து திருக்கோயில் பாதுகாப்பு சங்க மாநில துணைச் செயலாளருமான குருஜி பக்தன் முனைவர் தி.கார்த்திக் கண்ணன் அவர்கள் ஏற்பாட்டில் அனைத்து மக்கள் நலன் கருதி நடைபெற்ற முழு நாள் ஆன்மீக நிகழ்ச்சியில் ஐந்து பிரார்த்தனைகளை முன் வைத்து ஒன்றாவதாக வரும் இயற்கை சீற்றத்தை தடுக்க அக்னி புருஷ பூஜை, ஆன்மீகம் தழைக்க, +2, 10வது பள்ளி மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் எடுத்து நல்ல முறையில் தேர்ச்சி பெற, விசுவாவசு வருஷம் குழந்தைகள் உடல் நலம் மேம்பட,



சமூக ஆர்வலர்கள் பொதுச் சேவையில் வெற்றி பெற சிறப்பு யாகம் பூஜை, குரு பாத பூஜை, குரு விளக்கு பூஜை, பஜனை, பண்பாட்டு கலை நிகழ்ச்சி, நீர் மோர் விநியோகம் மற்றும் அன்னதானம் நடைபெற்றது. இதில் மூத்த குடிமக்கள் நல சங்க தலைவர் நீர்நிலை காப்பாளர் எஸ்.மீனாட்சிசுந்தரம் அவர்கள் முன்னிலையில், சிறப்பு அழைப்பாளராக குருஜி பரம்பரை வழி சிஷ்யர் யந்திராலய வி.ஸ்ரீதர் அவர்கள், ஆன்மீக சொற்பொழிவாளர் டாக்டர் சுதா சேஷயன், அனைத்திந்திய இந்து திருக்கோயில்கள் பாதுகாப்பு சங்க தேசிய தலைவர் அருள்வேலன், காமதேனு தொண்டு அறக்கட்டளை ட்ரஸ்டி பி.சங்கர் ஜி, ஆர்.எஸ்.எஸ் தங்க சாலக் திருநீர்மலை குரோம்பேட்டை ஏ.எஸ்.நரேந்திரன் ஜி, பி.அனந்த ராமன், சௌமி நாராயணன், விநாயகா பில்டர்ஸ் ஸ்ரீனிவாசன், ஆடிட்டர் சிவராமன், கே.விஜயலட்சுமி, சித்ரா, ஜெயா, முகுந்த ராவ், எஸ்.எம். கோவிந்தராஜன், டாக்டர் வி.சந்தானம், டி.ராதாகிருஷ்ணன், தியாகராஜன், பிரகலாதன், சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு ஆன்மீக வழிபாடு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் குருஜி பக்தர்கள் திரு எஸ்.கே.நாகராஜன், விபி பாலாஜி, செல்வி கே.ஜெயா, வழக்கறிஞர் பி.தாமோதரன், வழக்கறிஞர் வெற்றி சரவணன், சென்னை கேப்ஸ் புருஷோத்தமன் மற்றும் பல்லாவரம் துணை வட்டாட்சியர் எம்.தேவேந்திரன், சிட்லபாக்கம் காவல் உதவி ஆய்வாளர் கந்தவேல், மக்களுக்கான மக்கள் இயக்கத்தின் தன்னார்வலர்கள் சமூக செயற்பாட்டாளர்களான ழிஎல்டி.ஆர்.கிருஷ்ணன், ஆர்.கே.துளசிதரன், என்.சந்தோஷ் குமார், HM ரியாஸ் அகமது மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் மக்களுக்கான மக்கள் இயக்கம் சார்பில் அரசுக்கு கொடுக்கப்பட்ட கோரிக்கைகளில் தாம்பரம் மாநகராட்சியில் கட்டி முடிக்கப்பட்டு 9 மாதங்களாகியும் மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப் படாமல் இருந்த நகர்ப்புற சுகாதார நல வாழ்வு மையங்களை அரசும் தாம்பரம் மாநகராட்சி நிர்வாகம் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டதற்கும், பல்லாவரம் வட்டத்து க்குட்பட்ட அஸ்தினாபுரம், குரோம் பேட்டை, நெமிலிச்சேரி, மாணிக்கம் நகர், பல்லாவரம், கீழ்கட்டளை, பம்மல், அனகாபுத்தூர், திருநீர்மலை போன்ற பகுதிகளில் வாழும் மக்களுக்கு பட்டா வழங்கக் கோரியதை அரசு ஏற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு பட்டா வழங்கிய வருவாய்த் துறைக்கும் பல்வேறு இடங்களில் குண்டும் குழியும் ஆக இருந்த சாலைகளை அமைக்க கோரியதை ஏற்றுக் சாலைகளை அமைத்து தந்தமைக்கும், மூத்த குடிமகன் VLT ஆர்கிருஷ்ணன் என்பவர் அளித்த புகாரின் பெயரில் தாம்பரம் மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாகம் விசாரணை கமிஷன் அமைத்ததற்கும், தமிழ்நாடு முழுவதும் ஓராண்டுக்கு மேலாக நிலுவையில் வைக்கப்பட்ட ஒன்பதரை லட்சம் ரேசன் குடும்ப அட்டைகளை உடனடியாக வழங்க கோரியதை ஏற்று ரேசன் குடும்ப அட்டைகளை வழங்கியதற்கும், இது போன்று மக்களுக்கான மக்கள் இயக்கம் சமூக ஆர்வலர்களின் பல்வேறு கோரிக்கைகளை அரசு ஏற்று மக்கள் நலன் கருதி செய்து முடித்துக் கொடுத்த துறை நிர்வாகத்திற்கு, அரசுக்கும் மக்களுக்கான மக்கள் இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளர் தி.கார்த்திக் கண்ணன் அவர்கள் நன்றி கலந்த பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தூத்துக்குடி ஆர்டிஓ எல்லைக்குட்பட்ட 141 பள்ளி வாகனங்களில் கலெக்டர் ஆய்வு

தூத்துக்குடி, மே.08-

தூத்துக்குடி வட்டார போக்குவரத்து எல்லைக்குட்பட்ட பள்ளி வாகனங்களின் தரம் குறித்து மாவட்ட கலெக்டர் இளம்பகவத் ஆய்வு மேற்கொண்டார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் பள்ளிக் குழந்தைகளின் பாதுகாப்புக் கருதி தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் சிறப்பு விதிகளின்படி மாவட்ட நிர்வாகம், காவல்துறை, போக்குவரத்து துறை, பள்ளி கல்வித்துறை ஆகிய துறைகள் இணைந்து தூத்துக்குடி, திருச்செந்தூர், கோவில்பட்டி ஆகிய வட்டார போக்குவரத்து அலுவலகங்களைச் சேர்ந்த அனைத்து பள்ளி வாகனங்களும் ஆண்டுதோறும் கூட்டாய்வு செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி முதற்கட்டமாக தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலக எல்லைக்குட்பட்ட பள்ளி வாகனங்களை ஆய்வு செய்யும் நிகழ்ச்சி, தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலக மைதானத்தில் மாவட்ட கலெக்டர் இளம்பகவத் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட எஸ்பி ஆல்பர்ட் ஜான் முன்னிலை வகித்தார்.

ஆய்வுக்கு பிறகு மாவட்ட கலெக்டர் இளம்பகவத் நிருபர்களிடம் கூறுகையில், தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலக எல்லைக்குட்பட்ட 67 பள்ளிகளை சேர்ந்த 213 வாகனங்களில் 141 வாகனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதில் 71 வாகனங்கள் முழு தகுதியுடையதாக இருந்தது. 65 வாகனங்கள் சிறு, சிறு குறைகள் உள்ள காரணத்தால் நிராகரிக்கப்பட்டு குறைகள் நிவர்த்தி செய்து மீண்டும் ஆய்வுக்குட்படுத்த அறிவுறுத்தப்பட்டது. 5 வாகனங்களின் தகுதிச்சான்று ரத்து செய்யப்பட்டு, பழுதுகளை சரி செய்து மீண்டும் ஆய்வுக்குட்படுத்தி, தகுதிச்சான்றுகளை புதுப்பித்துக் கொள்ள அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

பாதுகாப்பு நலன் கருதி இந்த ஆய்வில் 16 விதமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பாக வாகனங்களின் தற்போதைய நிலை, தரம், குழந்தைகளின் பாதுகாப்பு, அரசு விதிமுறைகளின்படி வாகனங்கள் இயங்கப்படுவது, முதலுதவி பெட்டி மற்றும் தீயணைப்பு கருவிகள் பொருத்தப்பட்டு உள்ளது குறித்தும், அவசரகால வழிகள், இருக்கைகள், வாகனங்களின் தரைத்தளம், ஓட்டுநர்களின் உரிமம், வேகக்கட்டுப்பாட்டு கருவிகள் பொருத்தப்பட்டு உள்ளனவா, வாகனத்தின் உள்புறம், முன்புறம் மற்றும் பின்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள கேமராக்கள் மற்றும் வாகனத்தின் பின்புறம் அமைக்கப்பட்டுள்ள சென்சார் கேமராக்கள் பொருத்தப்பட்டு உள்ளனவா என்பது குறித்தும், போதிய பராமரிப்பு உள்ளதா போன்றவை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது, என்றார்.

தொடர்ந்து தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை மூலமாக வாகனத்தில் தீ விபத்து ஏற்படும்போது செய்ய வேண்டிய மீட்பு மற்றும் சீரமைப்பு நடவடிக்கைகள் குறித்த செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

பள்ளிகளில் பயணம் செய்யும் குழந்தைகளுக்கு ஆபத்து காலங்களில் செய்யப்படும் முதல் உதவிப் பயிற்சி, தூத்துக்குடி மாவட்ட 108 அவசர ஊர்தி அலுவலர்களால் செயல்முறை விளக்கம் நடத்தி காண்பிக்கப்பட்டது.

இந்த ஆய்வின் போது தூத்துக்குடி கோட்டாட்சியர் பிரபு, வட்டார போக்குவரத்து அலுவலர் முருகன், மோட்டார் வாகன ஆய்வாளர் பெலிக்ஸ் மாசிலாமணி, தீயணைப்பு துறை அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அங்கன்வாடி மையங்களுக்கு 15 நாள் விடுமுறை அறிவிப்பு

சென்னை, மே.08-

கோடை வெப்பத்தின் தாக்கத்திலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் நோக்கத்துடன் அங்கன்வாடி, குழந்தைகள் மையங்களுக்கு மே 11 முதல் மே 25 வரை 15 நாட்களுக்கு அரசு விடுமுறை அளித்துள்ளது.

தமிழகத்தில் அங்கன்வாடிகளில் பணிபுரியும் முதன்மை ஊழியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 2வது வாரமும், உதவியாளர்களுக்கு 3ம் வாரமும், குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கு 4வது வாரமும் என பயனாளிகளுக்கு உணவூட்டும் பணிகளுக்கு எந்தவொரு இடையூறும் ஏற்படாத வகையில் கோடை விடுமுறை வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த 2024ம் ஆண்டில் மே 8 முதல் மே 22ம் தேதி வரை 15 நாட்களுக்கு குழந்தைகள் மையங்களுக்கு கோடை விடுமுறை அளித்து அரசாணை வெளியிடப்பட்டது.

இந்த விடுமுறை காலங்களில் முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரும் சத்துமாவு அளவை கணக்கிட்டு 15 நாட்களுக்கு 750 கிராம் சத்துமாவு கோடை விடுமுறை தொடங்கும் முன்பாகவே வீட்டுக்கு எடுத்துச் சென்று பயன்படுத்தும் வகையில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து நடப்பாண்டும் குழந்தைகள் மையங்களுக்கு மே 11ம் தேதி முதல் மே 25ம் தேதி வரை 15 நாட்களுக்கு கோடை விடுமுறை வழங்குமாறு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் இயக்குநர் தமிழக அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.இதையடுத்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநரின் கருத்துருவை பரிசீலித்து சமூக நலத்துறை செயலர் ஜெயஸ்ரீ முரளிதரன் வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது: கோடை வெப்பத்தின் தாக்கத்திலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் நோக்கத்துடன் வரும் மே 11ம் தேதி முதல் மே 25ம் தேதி வரை 15 நாட்களுக்கு குழந்தைகள் மையங்களுக்கு கோடை விடுமுறை அளிக்கப்படுகிறது. இந்த விடுமுறை காலத்தில் 2 முதல் 6 வயதுக்குட்பட்ட முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 50 கிராம் சத்துமாவை கணக்கிட்டு 15 நாட்களுக்கு 750 கிராம் சத்துமாவை கோடை விடுமுறை தொடங்கும் முன் வீட்டுக்கு எடுத்துச் சென்று பயன்படுத்தும் வகையில் பயனாளிகளுக்கு வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் மே மாதத்தில் குழந்தைகளின் வருகை 50 சதவீதம் மட்டுமே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதன் அடிப்படையில், அந்த அளவுக்கு மட்டும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. கூடுதல் தேவை இருந்தால் அதுகுறித்து தனியே பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருச்செந்தூர் கோயில் கும்பாபிஷேக நாள், நேரம் குறிப்பு: கோயில் விதாயகர்த்தா அறிவிப்பு

தூத்துக்குடி, மே.08-

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நடைபெற உள்ள கும்பாபிஷேக நாள் மற்றும் நேரம் குறித்து கோயில் விதாயகர்த்தா சிவசாமி சாஸ்திரிகள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது: திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் விதாயகர்த்தாவாக நான் பணியாற்றுகிறேன். கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளை நாள் பார்த்து குறித்து கொடுத்து வருகிறேன்.

கடந்த 6 மாதங்களுக்கு முன்பு இக்கோயிலில் நடைபெற உள்ள கும்பாபிஷேகம் நடத்துவதற்கான நாள் குறித்து தருமாறு கோயில் இணை ஆணையர் கேட்டுக்கொண்டதன் பேரில் விசுவாவசு வருடம் ஆனி மாதம் 23ம் தேதி (07.07.2025) காலை 6 முதல் 7 மணி வரை மற்றும் காலை 9 மணி முதல் 10.30 மணி வரை என இரண்டு முகூர்த்த நேரங்கள் குறித்துக்கொடுத்தேன். அப்போது இவ்வருடத்துக்கான வாக்கிய பஞ்சாங்கம் வெளிவரவில்லை.

தற்போது வாக்கிய பஞ்சாங்கம் வெளியாகியுள்ளது. அதன் படி பார்க்கும் போது மேற்குறிப்பிட்ட நேரங்களை விட அபிஜித் முகூர்த்தம் சரியாக



இருக்கும் என்பதால், இது குறித்து ஸ்தலத்தார் சபை மற்றும் கைங்கர்ய சபை நிர்வாகிளுடன் கலந்து பேசி முகூர்த்தத்தில் உள்ள சின்ன சின்ன குறைபாடுகளை சரி செய்த பின் தற்போது வெளியாகியுள்ள புதிய பஞ்சாங்கம் படி பகல் 12.05 மணி முதல் 12.47 மணிக்குள் உள்ள முகூர்த்த நேரத்தில் கும்பாபிஷேகம் நடத்துவது சிறப்பாக இருக்கும் என தபால் கொடுத்துள்ளோம்.

இது குறித்து அதிகாரிகளிடன் பேசும் போது அவர்கள் 9 முதல் 10.30க்கான நேரத்தை குறிப்பிட்டு பேசினார்கள். அவர்களிடம் சுக்ல பஷ்ச துவாதசி, அனுசம் நட்சத்திரதில், சித்த யோகத்தில் உள்ள அபிஜித் முகூர்த்தமான 12.05 முதல் 12.47 வரை உள்ள இந்த நேரத்தில் கும்பாபிஷேகம் செய்வதால் பக்தர்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும், நாட்டு மக்களுக்கும், கிராம மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் நல்லது நடக்கும்.

எனவே பகல் 12.05 முதல் 12.47 வரை உள்ள நேரத்திற்கு கும்பாபிஷேகம் நடத்திட வேண்டும் என்று விளக்கி கூறியுள்ளோம். மேலும் முதல்வர், இந்து சமய அறநிலையத்துறை செயலாளர், ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், இக்கோயில் தக்கார், இணை ஆணையர் ஆகியோர்களுக்கு மனுவும் கொடுத்துள்ளோம் எனவே அனைவரின் நலன் கருதி பகல் அபிஜித் முகூர்த்த நேரத்தில் கும்பாபிஷேகம் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம் என கூறினார்.

அப்போது, திரிசுதந்திர ஸ்தலத்தார் சபை தலைவர் வீரபாகுமூர்த்தி அய்யர், செயலாளர் முத்துகிருஷ்ணன், துணைத்தலைவர் தேவராஜன் ஆனந்த், கைங்கர்ய சபா தலைவர் ஆனந்த், செயலாளர் கட்டியம் ராஜன், துணைத்தலைவர் ஆகாஷ், மூத்த நிர்வாகிகள் சங்கரசுப்பு சாஸ்திரிகள், ஈஸ்வரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# ஈரோடு ஜவுளிச்சந்தையில் கோடைகால ஜவுளி விற்பனை அதிகரிப்பு

ஈரோடு, மே.08-

ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா பகுதியில் கனி மார்க்கெட் ஜவுளி வணிக வளாகம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளான மணிக்கூண்டு ரோடு, டிவிஎஸ் வீதி, ஈஸ்வரன் கோயில் வீதி, என்.எம்.எஸ்.காம்பவுண்ட், காமராஜர் வீதி, பிருந்தா வீதி உள்ளிட்ட பகுதிகளில் ஜவுளி மொத்தம் மற்றும் சில்லரை விற்பனை நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

இங்கு வாரந்தோறும் திங்கள்கிழமை இரவு தொடங்கி, செவ்வாய்க்கிழமை



இரவு வரை ஜவுளிச் சந்தை நடைபெற்று வருகிறது. தவிர, ஜவுளி குடோன்களிலும் ஜவுளி விற்பனை நடைபெறுவது வழக்கம்.

தென்னிந்திய அளவில் பிரசித்தி பெற்ற ஈரோடு ஜவுளிச் சந்தைக்கு அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய வெளி மாநிலங்களில் இருந்தும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நூற்றுக்கணக்கான வியாபாரிகள் வந்து ஜவுளி கொள்முதல் செய்து செல்வார்கள். இந்நிலையில், இந்த வார ஜவுளிச்சந்தை நேற்று முன்தினம் இரவு தொடங்கி நேற்று இரவு வரை நடைபெற்றது.

கோடைக்காலம் தொடங்கியுள்ள நிலையில், காட்டன் ரக துணிகள் மற்றும் புதிய ஜவுளி ரகங்கள் நேற்று அதிக அளவில் விற்பனைக்கு வந்திருந்தன. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் இருந்தும் வியாபாரிகள் அதிக அளவில் ஜவுளி கொள்முதல் செய்ய வந்திருந்தனர்.

இந்த வார சந்தையில் கோடை வெயிலுக்கு ஏற்ற காட்டன் ஜவுளி ரகங்கள் அதிக அளவில் விற்பனையாகின.குறிப்பாக கோடை விடுமுறையில் சொந்த ஊர்களுக்கு வந்து செல்பவர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் வருகை ஆகியவற்றால் இந்த வார ஜவுளிச் சந்தையில் சில்லரை விற்பனை அதிக அளவில் நடைபெற்றதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**சேலம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு மட்டும் 5,500 மாணவ, மாணவிகளுக்கு ரூ.109 கோடி கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது**

# சமுத்திரம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு திட்ட முகாமில் 76 பயனாளிகளுக்கு ரூ.24.89 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி வழங்கி தகவல்

சேலம், மே.08-

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், சமுத்திரம் ஊராட்சியில் மக்கள் சந்திப்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.எம். செல்வகணபதி அவர்கள் முன்னிலையில் இன்று (07.05.2025) நடைபெற்றது. இம்முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டுவரும் அனைத்து திட்டங்களும் கடைக்கோடி கிராமங்களில் பொதுமக்களுக்கு சென்றடைய வேண்டும் என்ற வகையில் மாதந்தோறும் மக்கள் சந்திப்பு திட்ட முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில், இன்றைய தினம் மக்கள் சந்திப்பு திட்டம் நடைபெறும் சமுத்திரம் ஊராட்சியானது எடப்பாடி வட்டத்தில் அமைந்துள்ளது.

குறிப்பாக, சமுத்திரம் ஊராட்சி யில் சித்திரபாளையம், சமுத்திரம் காட்டுவளவு, கரட்டுக்காடு, மாணிக்கம்பட்டி, மூலக்கடை, திருமாலூர், உப்பாரப்பட்டி, சமுத்திரம் கஸ்பா மற்றும் தொப்பவளவு உள்ளிட்ட 9 குக்கிராமங்களை உள்ளடக்கிய 2,280 குடும்பங்கள் அடங்கிய 7,016 மக்கள் தொகை கொண்டதாகும். இக்குக்கிராமங்களில் அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் தனித்தனியாக மக்களின் இருப்பிடங்களுக்கே சென்று அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்துள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்களின் மூலம் மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கும் திட்டங்களை இப்பகுதி மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கல்வி கற்றல் மூலம் சமூக வளர்ச்சி மேம்பாடு அடைவதுடன் தனிமனித பொருளாதார வளர்ச்சியும் அடைய முடியும் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து தங்களது குழந்தைகளை குறைந் தபட்சம் உயர்கல்வி வரை முழுமையாக படிக்க வைப்பதை உறுதி செய்திட வேண்டும்.

மேலும், சமுத்திரம் பகுதி மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, பேருந்து வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் குறித்த கோரிக்கைகளை நிறைவேற்றித் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொ ள்ளப்பட்டும். கோடை காலம் என்பதால் வெயிலின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இச்சூழ்நிலையில் நம்மையும், நம் குடும்பத்தினரையும் வெப்பத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக, பொதுமக்கள் பகல் 12 மணி முதல் மாலை 3 மணி வரை அத்தியாவசியத் தேவையின்றி வெளியில் செல்வதைத் தவிர்க்க வேண்டுமென தொடர்ந்து அங்கன்வாடி பணியாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், நாளிதழ்கள் மூலம் தொடர்ந்து அறிவுறுத் தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் கோடை வெப்பத்தின் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள அதிகளவிலான நீர் பருக வேண்டும். தாகம் இல்லை என்றாலும் போதிய அளவிலான நீரினை பருக வேண்டும்.



அதேபோன்று, பெண்கள் மற்றும் குழந்தைகள் 1098 மற்றும் 181 ஆகிய உதவி மையத்தினைத் தொடர்பு கொண்டு தங்கள் கோரிக்கைகள் மற்றும் புகாரினைத் தெரிவிக்கலாம். இதன்மூலம் சட்ட உதவிகள் உள்ளிட்ட அனைத்தையும் பெற முடியும்.

மேலும், மாணவ, மாணவிகள் அனைவரும் உயர்கல்வி பயில பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பதற்காக சேலம் மாவட்டத்தில் தொடர்ந்து கல்விக்கடன் மேளாக்கள் நடத்தப்பட்டு கல்விக்கடன் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு மட்டும் 5,500 மாணவ, மாணவிகளுக்கு ரூ.109 கோடி கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் கல்விக்கடன் தேவைப்படும் மாணவ, மாணவிகள் தங்கள் அருகில் உள்ள வங்கிகள் அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் மூலமாக விண்ணப்பித்துப் பயன்பெறலாம்.


சேலம் மாவட்டத்தில் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனைகள் மற்றும் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதுமான வெறிநோய் தடுப்பூசிகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. எனவே, நாய்க்கடி போன்ற நிகழ்வுகள் ஏற்படும்போது கட்டாயமாக தடுப்பூசிகளை உரிய காலத்தில், அனைத்து தவணைகளையும் போட்டுக்கொள்ள வேண்டும். மேலும், பொதுமக்க ளுக்கு ஏதேனும் கோரிக் கைகள் இருந்தால் அதனை தெரிவிக் கும்போது அதற்கான நடவடிக்கையும் விரைவில் மேற்கொள்ளப்படும்.

இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பு திட்ட முகாமில் வருவாய்த்துறையின் சார்பில் இலவச வீட்டுமனைப் பட்டா, உட்பிரிவு பட்டா மாறுதல், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் புதிய மின்னணு குடும்ப அட்டைகள், சமூக பாதுகாப்புத் திட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேளாண்மை உழவர் நலத்துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, தாட்கோ, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் கூட்டுறவுத்துறை மூலம் மொத்தம் 76 பயனாளிகளுக்கு ரூ.24.89 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அரசின் நலத்திட்டங்களை பெற்றுள்ள பயனாளிகள் தங்கள் வாழ்வில் மென்மேலும் உயர இதனைப் பயன்படுத் திக்கொள்ள வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை பொறியியல் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. இரா. ரவிக்குமார், வேளாண்மை இணை இயக்குநர் திரு.ச.சிங்காரம், தோட்டக்கலை துணை இயக்குநர் திருமதி கே.மஞ்சுளா, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திரு. சே.கணேஷ், தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி ச.ஜானகி, வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு. இரா. குமரன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு. என்.ஜெயகுமார், எடப்பாடி வருவாய் வட்டாட்சியர் திரு. கே. வைத்திலிங்கம் உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை மாவட்ட எழுத்தாளர் மகா பிரபு உள்ளிட்ட 25 பேர் இணைந்து எழுதிய காசு பணம் துட்டு தொகுப்பு கட்டுரை நூல் வெளியீட்டு விழா



சிவகங்கை, மே.8-

சிவகங்கை மாவட்ட எழுத்தாளர் மகா பிரபு உள்ளிட்ட 25 பேர் இணைந்து எழுதிய காசு பணம் துட்டு தொகுப்பு கட்டுரை நூல் வெளியீட்டு விழா காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக லக்ஷ்மி வளர் தமிழ் நூலக அரங்கில் (பழனியப்ப செட்டியார் நினைவரங்க வளாகத்தில் அமைந்துள்ள) மே 10, சனிக்கிழமை காலை 10 மணி அளவில் நடைபெற உள்ளது. தான் எழுதிய எட்டு நூல்களுள் இது மகாபிரபுவின் மூன்றாவது தொகுப்பு நூலாகும். தனது தொகுப்பு நூல்கள் மூலம் இதுவரை 65 பேரை எழுத்தாளர்களாக அறிமுகப்படுத்தி ள்ள மகா பிரபு இந்நூல் மூலம் 23 பேரை புதிய எழுத்தாளர்களாக தமிழ் இலக்கிய உலகிற்கு அழைத்து வந்துள்ளார். பேராசிரியர்கள், ஆசிரியர்கள், பொறியாளர், தொழில் முனைவோர், மாணவர், தொழிலாளி என 25 பேர் தங்கள் படைப்புகளை பூமி, சுத்தம், மின் தொழிலாளர்கள், புன்னகை, பள்ளிக்கூடம், முதுமை, மரம், ஆன்மிகம், பணம், தமிழ், பழமை, மாணவ கண்மணிகளே, நம்பிக்கை, வெற்றி, மகிழ்ச்சி, ஜல்லிக்கட்டு, அமைதி, மழை, அழகு, துரோகி, முயற்சி, சேமிப்பு, லட்சியம், பொறுமை, நன்றி என கட்டுரைகளாக்கியுள்ளனர். நூல் வெளியீட்டு விழாவில் அனைவரும் கலந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு: 9944089151



## குலசேகரம் அருகே சிறுவன் கையில் சிக்கிய காப்பு

குலசேகரம், மே.08-

குலசேகரம் அருகே உள்ள தேசக்கவிளாகம் பகுதியை சேர்ந்த சிறுவன் 6ம் வகுப்பு தேர்வு எழுதியுள்ளார். சிறுவன் தனது கையில் சில்வர் காப்பு ஒன்று அணிந்துள்ளார். நேற்று அந்த காப்பை மேலும் கீழுமாக கையில் போட்டு விளையாடியுள்ளார். அப்போது காப்பு கையின் முட்டுப் பகுதிக்கு அருகில் சிக்கி கொண்டது. இதனால் கையின் சதைப்பகுதி இறுகி வலியும் வீக்கமும் ஏற்பட்டுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் கையில் எண்ணெய் பூசி காப்பை அசைத்து கழற்ற முயற்சித்தனர். ஆனால் எதுவும் செய்ய முடியவில்லை. வேறு வழியின்றி குலசேகரத்தில் ஒரு நகை கடைக்கு அழைத்துச் சென்று வெட்டி எடுக்க முயன்றும் முடியவில்லை.

பைக் ஒர்க் ஷாப் ஒன்றில் வைத்து கையில் சிக்கியிருந்த காப்பை அகற்ற முயன்றும் பயனளிக்கவில்லை. இதனையடுத்து சிறுவனை குலசேகரம் தீயணைப்பு நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கு வைத்து தீயணைப்பு வீரர்கள் சிறுவன் கையில் சிக்கியிருந்த காப்பை வெட்டி அகற்றினர். அதுவரை பயத்தில் வலியுடன் இருந்த சிறுவன் நிம்மதி பெருமூச்சு விட்டான்.



## காவல் அதிகாரிகள், ஆளிநர்களிடமிருந்து குறைதீர் மனுக்களை பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவு

சென்னை, மே.08-

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் காவலர் குறை தீர்க்கும் சிறப்பு முகாமில், 77 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களிடமிருந்து குறைதீர் மனுக்களை பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

சென்னை பெருநகர காவல்துறையினரின் பணி சிறக்க அவர்தம் குறைகளை போக்கி, காவலர் குடும்ப நலனுக்கு அதிகாரிகள் உதவிடும் வகையில், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண், உத்தரவின்பேரில் 06.05.2025 அன்று காவலர் குறைதீர் சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளதாக சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருந்தது.

அதன்பேரில், இன்று (06.05.2025) வேப்பேரி, காவல் ஆணையாளர் அலுவலக கலந்தாய்வு கூடத்தில் நடைபெற்ற ''காவலர்கள் குறை தீர்க்கும் சிறப்பு முகாமில்'' சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண், சென்னை பெருநகர காவல், சட்டம், ஒழுங்கு, குற்றப்பிரிவு, போக்குவரத்து காவல் நிலையங்கள், ஆயுதப்படை மற்றும் சிறப்பு பிரிவுகளில் பணிபுரியும், 3 உதவி ஆணையாளர்கள், 08 காவல் ஆய்வாளர்கள், 07 காவல் உதவி ஆய்வாளர்கள், 59 காவல் ஆளிநர்கள் என 77 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களிடமிருந்து குறைதீர் மனுக்களை பெற்றார்.

இம்முகாமில் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் பணிமாறுதல், தண்டனைகளைதல், காவலர் குடியிருப்பு கோருதல், ஊதிய முரண்பாடு களைதல் உள்ளிட்ட மனுக்களை பெற்று, இம்மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை பெருநகர காவல், கூடுதல் ஆணையாளர் (தலைமையிடம்) விஜயேந்திர பிதாரி, துணை ஆணையாளர் நி.சுப்புலட்சுமி, (நிர்வாகம்), காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் அமைச்சுப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



## அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு ரூ.20,000 பண்டிகை கால முன்பணம்: அரசாணை வெளியீடு

சென்னை, மே.08-

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பண்டிகை கால முன் பணம் ரூ.20 ஆயிரமாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டது. முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த ஏப்ரல் 28ம் தேதி பேரவையில் விதி 110ன் கீழ் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்காக 9 புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். அதில் பண்டிகை கால முன்பண உயர்வு பற்றிய அறிவிப்பையும் வெளியிட்டார். அந்த அறிவிப்பில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களின் குடும்பத்தினருடன் பண்டிகைகளை சிறப்பாக கொண்டாடும் வகையில், இதுவரை வழங்கப்பட்டு வரும் பண்டிகை கால முன்பணம் ரூ.10 ஆயிரம், இனி ரூ.20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று கூறியிருந்தார்.

இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதத்தில் அதற்கான அரசாணையை நிதித்துறை செயலாளர் த.உதயச்சந்திரன் நேற்று பிறப்பித்தார். அந்த உத்தரவில் கூறி இருப்பதாவது: உள்ளாட்சி அமைப்புகளின் கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்கள், அரசு ஊழியர்கள் என பண்டிகை கால முன்பணம் பெறும் தகுதியுடைய அனைவருக்கும், இந்த அரசாணை பொருந்தும். அதன்படி அவர்கள் ரூ.20 ஆயிரத்தை பண்டிகை கால முன்பணமாக பெற்றுக் கொள்ளலாம். அந்த பணத்தை பிடித்தம் செய்யும் முறையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## உயிரியல் பூங்கா தூதுவர் திட்டம்: வண்டலூர் உயிரியல் பூங்கா நிர்வாகம் அறிவிப்பு

தாம்பரம், மே.08-

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கை: இந்தாண்டு கோடை விடுமுறையை உற்சாகமாகவும், அறிவு நிரம்பியதாகவும் மாற்ற அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, உயிரியல் பூங்கா தூதுவர் திட்டத்தை இணையதளத்தில் அறிமுகம் செய்துள்ளது. 5ம் வகுப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்பு படிக்கும் மாணவர்கள் நிகழ்வில் பங்கேற்கலாம். மாணவர்கள் பல்வேறு வகையான வனவிலங்குகளை பற்றி அறிந்து கொள்ளும் வகையில் தனித்தனி வகுப்புகளாக பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன, வண்ணத்துப்பூச்சிகள் மற்றும் பூங்காவின் செயல்பாடு பற்றி பூங்கா களத்துக்கு சென்று அறியும் வாய்ப்பு பெறுவார்கள்.



உயிரியல் பூங்காவின் வனவிலங்கு மருத்துவர்கள், உயிரியலாளர்கள் மற்றும் பூங்கா கல்வியாளர்களால் நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது. ஒவ்வொரு தலைப்புக்கும் பயிற்சி தாள்களுடன் நிகழ்ச்சிக்கு வேண்டிய பொருட்கள் அடங்கிய தொகுப்பை மாணவர்களுக்கு வழங்கப்படும். 2 நாள் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை நிகழ்ச்சி நடைபெறும். ஒவ்வொரு வகுப்பிலும் 50 மாணவர்கள் கோடை தட்ப வெப்ப நிலையை கருத்தில் கொண்டு 5 பிரிவுகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 14, 15, 21, 22, 28, 29, 30, 31 ஆகிய தேதிகளிலும், 4.6.2025 முதல் 5.6.2025 வரை ஒவ்வொரு பிரிவிலும் 50 மாணவர்கள் கலந்து கொள்ளலாம். முடிவில் பங்கேற்பாளர்களுக்கு "வண்டலூர் உயிரியல் பூங்கா தூதுவர்" என்ற சான்றிதழ், பேட்ஜ் வழங்கப்படும். மேலும் 10 முறை வண்டலூர் உயிரியல் பூங்காவிற்கு வந்துசெல்ல இலவச கடவுச்சீட்டும் வழங்கப்படும். வண்டலூர் உயிரியல் பூங்காவின் தூதராக இருப்பதோடு உயிரியல் பூங்காவை மேம்படுத்து வதிலும் விலங்குகளை பாதுகாப்பதிலும் முக்கிய பங்காற்றுவார்கள். நிகழ்ச்சியில் பங்கேற்க www.aazp.in/summercamp2025 என்ற இணையதள முகவரியில் பதிவுசெய்யலாம். இவ்வாறு செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சென்னை புறநகர் மாவட்ட கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

பள்ளிக்கரணை, மே.08-

சென்னை புறநகர் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கரணையில் 07.05.25. புதன்கிழமை, காலை 10 மணிக்கு மணிக்கு, இடம்: பள்ளிக்கரணை சென்னை மாநகராட்சி கட்டிடம் அருகில் முன்னாள் முதலமை ச்சர், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி, கே. பழனிச்சாமி ஆணைக்கிணங்க, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட இடங்களில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யாமலும் மக்களின் பல்வேறு அத்தியாவசிய கோரிக்கை நிறைவேற்றாமலும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அம்மா உணவக ங்களை முறையாக பராமரிக்காமலும் இருந்து வரும் ஆளுங்கட்சி திமுக அரசை கண்டித்தும்: மக்களின் அடிப்படை மற்றும் அத்தியாவசிய தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றித் தர வலியுறுத்தியும் சென்னை புறநகர் மாவட்ட கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கழக அமைப்புச் செயலாளர், திருவள்ளுவர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சருமான, பா. பென்ஜமின் தலைமையில் அ.தி.மு.க சோழிங்கநல்லூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், சென்னை புறநகர மாவட்ட கழகச் செயலா ளருமான, கே. பி. கந்தன் முன்னிலையில் நடைபெற்றது. இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்ட கழக, ஊராட்சி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



# அரசு அங்கன்வாடி மையத்தில் மிகவும் சேதமடைந்து அறுந்துவிழும் நிலையில் உள்ள மின்சார வயர்

நாகர்கோவில், மே.08-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 3 வது வார்டுக்கு உட்பட்ட மேலபெருவிளை பகுதியில் அரசு அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது.

இங்கு 20ற்கும் மேற்பட்ட குழந்தைகள் உள்ளன. மின்கம்பத்தில் இருந்து அங்கன்வாடி வளாகத்திற்கு வரும் மின்சார வயர் கடந்த வருடம் அருந்து கீழே விழுந்தது.

வயர் மிகவும் சேதம் அடைந்து உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருந்ததால் சில மாதங்களாக மின்சார வசதி இல்லாமல் இருந்து வந்தது.

மீண்டும் அந்த சேதம் அடைந்த மின்சார வயரை கடமைக்காக முடிந்து வைத்து உபயோகப்படுத்தி வருகின்றனர்.

இது எப்போது வேண்டுமானாலும் அறுந்து விழுந்து விபத்து ஏற்படலாம். குழந்தைகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

மேலும் சில நாட்களுக்கு முன்பு அந்த பகுதியில் ஆய்வுக்காக வந்த

உதவி பொறியாளர். தேவி அவர்கள் இதனை பார்வையிட்டு ஆபத்தாக உள்ளது உடனடியாக இதனை மாற்ற வேண்டுமென கூறிவிட்டு சென்றார். ஆனால் 10 நாட்களுக்கு மேலாகியும் இன்னும் அது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் குற்றச்சாட்டு.

பச்ச குழந்தைகளின் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ள மின்சார வயர் மாற்றுவதில் ஏன் இவ்வளவு அலட்சியமாக செயல்படுகின்றனர் மாநகராட்சி அதிகாரிகள் என பொதுமக்கள் கேள்வி?

அசம்பாவிதம் எதுவும் ஏற்படுவதற்கு முன்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை.



# பம்மல் தெற்கு பகுதி மதிமுக சார்பில் 32ஆம் ஆண்டு துவக்க விழா மற்றும் கழக கொடியேற்று விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது

பம்மல், மே.08-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பம்மல் தெற்கு பகுதி சார்பில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் 32ஆம் ஆண்டு துவக்க விழா மற்றும் கழக கொடியேற்று விழா பம்மல் தெற்கு பகுதி செயலாளர் பிரிவீன் ஏற்பாட்டில் சுமார் 15க்கும் மேற்பட்ட இடங்களில் கழக கொடியேற்றி வைத்து இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் மாவை மகேந்திரன் கலந்து கொண்டு இல்ல தோறும் கழக கொடி ஏற்றும் நிகழ்ச்சி வீடு வீடாக சென்று கழக கொடி ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கினார்கள்

இந்த நிகழ்ச்சியில் அவைத் தலைவர் தாண்டவராயன், பொருளாளர் கோபால், பழனி, பாரதி, துரை, மூர்த்தி, லஷ்மி, குபேந்திரன், ரமேஷ், பி.வி.பாலு, கலை, பிரபாகரன் பிருந்தா மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் கிறிஸ்துராஜ். தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்




திருப்பூர், மே.08-

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் கடந்த (05.05.2025) திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.

குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 467 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சாரபில் 10 பயனாளிகளுக்கு உலாமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய அட்டைகளையும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.3,285/மதிப்பீட்டிலான காதொலி கருவியை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சாம்சாந்தகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) மகாராஜ், (தேர்தல்) ஜெயராமன், வருவாய் கோட்டாட்சியர்கள் (திருப்பூர்) மோகனசுந்தரம், (உடுமலைப்பேட்டை)

குமார், (தாராபுரம்) பெலிக்ஸ் ராஜா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) பக்தவச்சலம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் கல்பனா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் புஸ்பாதேவி, மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், துணை ஆட்சியர்கள் மற்றும் அனைத்து அரசுத்துறைகளின் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டத்தில் கடந்த (06/05/2025-/07/05/2025) நேற்று காலை 6மணி வரை பெய்த கன மழையின் அளவுகள் சிவகங்கை 18.00 மி.மீ, மானாமதுரை 8.80.மி.மீ, இளையான்குடி மழை பெய்யவில்லை திருப்புவனம் 73.80மி.மீ, திருப்பத்தூர் 56.00மி.மீ, காரைக்குடி 4.00மி.மீ, தேவகோட்டை மழை பெய்யவில்லை காளையார் கோயில்4.80மி.மீ, சிங்கம்புணரி11.40 மி.மீ மொத்தம் 176.80 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.




# உடலுக்கு தீங்கு விளைவிக்கும் புகையிலை பொருட்களை தவிர்ப்போம், உடல் ஆரோக்கியம் பெறுவோம்

## சார்பு நீதிபதி திருமதி. V.ராதிகா அவர்கள் அறிவுறுத்தல்

சிவகங்கை, மே.08-

தமிழ்நாடு சட்டப்பணிகள் ஆணைக்குழு செயல்திட்டத்தின்படி, மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. K.அறிவொளி அவர்களின் அறிவுரையின்படி சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அரசு சட்டக் கல்லூரியில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் காரைக்குடி வட்ட சட்டப்பணிகள் குழு இணைந்து புகையிலை பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்த சட்ட விழிப்புணர்வு முகாம் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர்/சார்பு நீதிபதி திருமதி. V.ராதிகா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

முகாமில் செயலாளர்/சார்பு நீதிபதி அவர்கள் பேசும்போது புகையிலை பொருட்கள் மற்றும் போதை பொருட்களால் நுரையீரல் தொற்று, சர்க்கரை நோய் போன்ற உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடும் எனத் தெரிந்தும் அதை நாம் விலை கொடுத்து வாங்கி பயன்படுத்துகிறோம். இதனால் பயன்படுத்துபவர்கள் பாதிக்கப்படுவதுடன் அதிலிருந்து வெளிப்படும் புகையை சுவாசிப்பதால் குழந்தைகள், பெண்கள் என அருகிலுள்ள அனைவரும் பாதிக்கப்படுகிறார்கள். சமூக சீர்குலைவிற்கு காரணமான போதை பொருட்களை தவிர்த்து உடல் ஆரோக்கியம் பெற வேண்டும் என தெரிவித்தார்.

முகாமில் காரைக்குடி அரசு சட்டக்கல்லூரி முதல்வர் டாக்டர் S.முருகேசன், பேராசிரியர் கருப்பசாமி மற்றும் பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# திருப்புவனம் வட்டம், தவத்தாரேந்தல் கிராமத்தில், வருகின்ற 14.05.2025 அன்று மக்கள் தொடர்பு முகாம் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தகவல்

சிவகங்கை, மே.08-

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கொந்தகை உள்வட்டம், அம்பலத்தாடி குரூப், தவத்தாரேந்தல் கிராமத்தில் வருகின்ற 14.05.2025 (புதன்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெறவுள்ளது.

மக்கள் தொடர்பு முகாமில், அரசுத்துறை அலுவலர்களை ஒருங்கிணைத்து அரசின் திட்டங்களை துறை சார்ந்த முதன்மை அலுவலர்களைக் கொண்டு, பொதுமக்களுக்கு திட்டங்கள் குறித்து எடுத்துரைத்து, தகுதிவாய்ந்த பயனாளிகளை பயன்பெறச் செய்வதே இம்மக்கள் தொடர்பு முகாமின் நோக்கமாகும்.

எனவே, மேற்கண்ட கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் நடைபெறவுள்ள மக்கள் தொடர்பு முகாமில் கலந்து கொண்டு, அரசின் திட்டங்களை பெறுவதற்கான வழிமுறைகளை அறிந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.




# திருப்பூர் மாவட்ட சுகாதார இணை இயக்குனர் கோடை வெப்ப தாக்குதலை தடுக்க குண்டடம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு

திருப்பூர், மே.08-

திருப்பூர் மாவட்ட சுகாதார இணை இயக்குனர் கோடை வெப்ப தாக்குதலை தடுக்க குண்டடம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு

திருப்பூர் மாவட்ட சுகாதார இணை இயக்குனர் ஜெயந்தி அவர்கள் குண்டடம் பிளாக்கில் நேரடி ஆய்வு செய்தார். மேலும் குண்டடம் மருத்துவ முகாமில் கோடை வெயிலின் தாக்கத்தை தணிக்க ORS கரைசலை பொதுமக்களுக்கு வழங்கினார். சுற்றுவட்டார பொதுமக்கள் ORS கரைசலை அருந்த குண்டடம் பிளாக்கில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் கோடை காலத்தில் வெப்ப தாக்குதலில் இருந்து பாதுகாப்பாக இருக்க கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளையும் பொதுமக்களுக்கு எடுத்து ரைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட தொற்றா நோய் திட்ட அலுவலர் மருத்துவர். மரு.சே. பாபுசுதாகர் மற்றும் வட்டார மருத்துவ அலுவலர் குண்டடம் ஸ்ரீ சுகு ஆகியோர் கலந்து கொண்டனர் இந்நிகழ்வில் ஏராள பொதுமக்களும் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



# பொதுப்பணித்துறையின் மூலம் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான பூமி பூஜை விழா

இராமநாதபுரம், மே.08-

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம், தாமரைக்குளம், கும்பரம், புதுமடம், மண்டபம், இராமேஸ்வரம் ஆகிய பகுதிகளில் இன்று (07.05.2025) பொதுப்பணித்துறையின் மூலம் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான பூமி பூஜை விழா நடைபெற்றது. இவ்வி ழாவில் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர் பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையேற்று புதிய கட்டடப் பணிகளுக்கான பூமி பூஜையினை துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரத்தில் ரூ.500 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டுவதற்கான பூமி பூஜையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரஞ்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., அவர்களும், இராம நாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்களும் துவக்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து தாமரைக்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.94.24 இலட்சம் மதிப்பீட்டில் 04 வகுப்பறை கட்டடம் கட்டுவதற்கும், கும்பரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.235.60 இலட்சம் மதிப் பீட்டில் 10 வகுப்பறை கட்டடங்கள் கட்டுவதற்கும், புதுமடம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.249.42 இலட்சம் மதிப்பீட்டில் 10 வகுப்பறை கட்டடங்கள் மற்றும் கழிப்பறை கட்டடங்கள் கட்டுவதற்கும், மண்டபம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.259.16 இலட்சம் மதிப்பீட்டில் 11 வகுப்பறை கட்டடங்கள் கட்டுவதற்கும், இராமேஸ்வரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.141.36 இலட்சம் மதிப் பீட்டில் 06 வகுப்பறை கட்டடங்கள் கட்டுவதற்கும், இராமேஸ்வரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.235.60 இலட்சம் மதிப்பீட்டில் 10 வகுப்பறை கட்டடங்கள் கட்டுவதற்கும் என மொத்தம் ரூ.1,715.38 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான பூமி பூஜையினை இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் துவக்கி வைத்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161